# இந்திய மாநிலங்கள் - ஒரு பார்வை

இந்தியா தெற்காசியாவில் உள்ள ஒரு குடியரசு நாடாகும். இந்தியப் பெருநிலம் தெற்கே இந்திய பெருங்கடல், மேற்கே அரபிக்கடல், கிழக்கே வங்காள விரிகுடா ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இந்தியாவில் மொத்தம் 28 மாநிலங்களும் 9 யூனியன் பிரதேசங்களும் உள்ளன.

இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சிலவற்றில் (புதுச்சேரி, ஜம்மு காஷ்மீர், டெல்லி) மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுகள் உள்ளன. மற்ற ஒன்றிய பகுதிகளான யூனியன் பிரதேசங்கள் இந்திய அரசால் நியமிக்கப்படும் ஆளுநர்களை கொண்ட குடியரசு தலைவரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளாகும்.

இந்தியாவில் 1956ம் ஆண்டு மொழிவாரியாக சில மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர் அதிலிருந்து பல மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. அந்த மாநிலங்கள் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு சிறப்புகள் உள்ளன. அவற்றை இங்கு தெளிவாக அறிந்து கொள்ளலாம் வாங்க..

## ஆந்திரப் பிரதேசம்

» ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகர் அமராவதி.

» ஆந்திரப் பிரதேசம் (Andhra Pradesh), இந்தியாவின் 28 மாநிலங்களுள் ஒன்றாகும்.

» இம்மாநிலம் அக்டோபர் 1, 1953ம் ஆண்டு மாநில அந்தஸ்து பெற்றது.

» இந்தியாவின் தென்கிழக்கில் அமைந்துள்ள ஆந்திர மாநிலம் பரப்பளவின் படி நாட்டின் 8வது பெரிய மாநிலம் ஆகும்.

» தற்போது 13 மாவட்டங்களை உள்ளடக்கிய ஆந்திரப் பிரதேசம் இந்தியாவின் 2-வது நீண்ட கடற்கரையைக் கொண்டது.

» கிழக்கே வங்கக்கடலும், வடக்கே தெலுங்கானாவும், தெற்கில் தமிழ்நாடும், வடகிழக்கே ஒடிசாவும், மேற்கில் கர்நாடகமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

» இந்தியாவின் செம்மொழிகளில் ஒன்றான தெலுங்கு இம்மாநிலத்தின் அலுவல்முறை மொழியாகவும், பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியாகவும் உள்ளது.

» ஆந்திர மாநிலத்தின் மொத்த பரப்பளவு 1,62,970 km2 ஆகும்.

## தனி சிறப்புகள்

» உழவு தொழில் ஆந்திரப் பிரதேசத்தில் அதிகமாக பழக்கத்திலுள்ள தொழிலாகும். அரிசி, புகையிலை, பருத்தி, மிளகாய், கரும்பு ஆகியவை இங்கு விளைவிக்கப்படுகின்றது.

» தெலுங்கு வருடப்பிறப்பான உகாதி கோலாகலப் பண்டிகையாகும்.

» திருப்பதியில் உள்ள ஏழுமலையான் கோயில் இந்தியாவிலேயே அதிக வருவாய் கொண்ட கோயில் மற்றும் உலகப் பிரசித்தி பெற்றது ஆகும்.

» சத்ய சாய்பாபாவின் புட்டப்பர்த்தி, ஸ்ரீகாளஹஸ்தி, ஸ்ரீ ராகவேந்திர சுவாமியின் மந்த்ராலயம் ஆகிய ஸ்தலங்கள் ஆந்திரப் பிரதேசத்தை புண்ணிய பூமியாக பிரதிபலிக்கின்றன.

» சப்மரைன் மியூசியம் என்றழைக்கப்படும் அருங்காட்சியகம் (நிஜ நீர்மூழ்கி கப்பல்) ராமகிருஷ்ணா பீச் எனப்படும் கடற்கரையில் உள்ளது.

» ஸ்மிருதிகா என்ற பெயரிலும் சப்மரைன் அருங்காட்சியகம் அழைக்கப்படுகிறது. இந்திய கப்பற்படையில் இருந்த குர்சுரா எனும் ரஷ்ய தயாரிப்பு நீர்மூழ்கிக்கலம் 2001-ம் ஆண்டில் கரைக்கு கொண்டு வரப்பட்டு இப்படி ஒரு 'நீர்மூழ்கி அருங்காட்சியகம்' எனும் புதுமையான அமைப்பாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

» கடப்பா நகரில் அமைந்திருக்கும் சூஃபி ஆலயமான அமீன் பீர் தர்காவுக்கு மத வேறுபாடின்றி அனைத்து தரப்பு மக்களும் கூட்டம் கூட்டமாக வந்து செல்கின்றனர்.

» கர்னூல் நகரத்தின் முக்கியமான அடையாளங்களுள் ஒன்றாக விளங்கும் கர்னூல் கோட்டையானது, கொண்ட ரெட்டி புருஜு என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது.

» அரக்கு பள்ளத்தாக்கில் நிறுவப்பட்டிருக்கும் டிரைபல் மியூசியம் பழங்குடியினரின் வாழ்க்கை குறித்து பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

» காரமான உணவைப் போலவே போர்க்குணமும், அன்பும், கலாச்சாரப் பெருமையும் மிகுந்து காணப்படுவது ஆந்திர மாநிலத்தின் தனித்துவம் என்றால் மிகையாகாது.

## அருணாச்சல் பிரதேசம்

- அருணாச்சல் பிரதேசத்தின் தலைநகர் இட்டாநகர்.
- அருணாச்சல் பிரதேசம் (Arunachal Pradesh), இந்தியாவின் 28 மாநிலங்களுள் ஒன்றாகும்.
- இம்மாநிலம் பிப்ரவரி 20, 1987ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இந்தியாவின் வடகிழக்கில் அருணாச்சல் பிரதேசம் அமைந்துள்ளது.
- அருணாச்சல் பிரதேசத்தில் தற்போது 25 மாவட்டங்கள் உள்ளன.
- தெற்கே அசாம் மற்றும் நாகாலாந்து மாநிலங்களும், மேற்கில் பூட்டான், கிழக்கில் மியான்மர் மற்றும் வடக்கில் சீனா நாடுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன.
- ஆசியாவிலேயே அதிகமான மொழிச் செறிவுள்ள மாநிலம். இந்த மாநிலத்தில் சுமார் 30 முக்கிய மொழிகளும், 50-க்கும் மேற்பட்ட கிளை மொழிகளும் பேசப்படுகின்றன.
- அருணாச்சல் பிரதேசத்தின் மொத்த பரப்பளவு 83,743 km2 ஆகும்

### தனி சிறப்புகள்

- அருணாச்சல் பிரதேசம் என்றால் ‘சூரியன் உதிக்கும் நாடு’ என்று பொருள். அருணாச்சல் பிரதேசம் 1987ல் மாநிலமாக அறிவிக்கப்படும் வரை, வடகிழக்கு எல்லைப்புற முகமை என்ற பெயரில் இயங்கியது.
- இந்தியாவில் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இட்டாநகரில் வசிப்பதால் இது ‘மினி இந்தியா’ என்றே அழைக்கப்படுகிறது. இட்டாநகர் தொல்லியல் ஸ்தலங்கள் அதிகம் காணப்படும் பிரதேசமாக பிரசித்தி பெற்றுள்ளது.
- நெல்லுடன் வயலிலேயே மீன் வளர்ப்புத் தொழில் செய்வதில் வல்லவர்கள் அருணாச்சல் பிரதேச மக்கள். அதாவது ஒரே சாகுபடியில் நெல்லுடன் இருமுறை மீன் அறுவடையும் நடக்கும்.
- அதிக மழைப்பொழிவு உள்ள மாநிலம் இது. மே முதல் செப்டம்பர் மாதங்களில் ஏறக்குறைய 4100 மி.மீ. மழை பெய்கிறது.
- மலையேற்றம், டெரெக்கிங் மற்றும் படகுச் சவாரி போன்றவற்றிற்கு அலாங் ஒரு சிறந்த இடமாகும். இந்த நகரம் கரும்பு மற்றும் மூங்கில் பொருட்களுக்கு மிகவும் பிரபலமானது.

» போம்டிலா என்ற சிறு நகரம், கடல் மட்டத்திலிருந்து சுமார் 8000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. கிழக்கு இமயமலைத் தொடர்களினூடாக அமைந்திருக்கும் போம்டிலா அற்புதமான சுற்றுப்புறத்தைக் கொண்டிருக்கும் நகரமாகும்.

» அருணாச்சல் பிரதேசத்தில் உள்ள நம்டஃபா தேசியப் பூங்கா வனவிலங்கு சரணாலயத்திற்காக புகழ் பெற்று விளங்குகிறது.

» அருணாச்சல பிரதேசத்தின் நுழைவாயில் எனக் கருதப்படும் பசிகாட் சாகச விளையாட்டுக்களுக்காகவும், இயற்கை எழில் நிறைந்த இடங்களுக்காகவும் புகழ்பெற்று விளங்குகிறது.

» பச்சைப் பசேலென்ற பள்ளத்தாக்குகளையும், மனதை மயக்கும் மலைகளையும் கொண்ட ஸ்தலமாக காணப்படும் ரோயிங், அருணாச்சல் பிரதேசத்தின் கீழ்ப்புற திபாங் பள்ளத்தாக்கு மாவட்டத்தின் தலைமையகமாகும்.

» அருணாச்சல் பிரதேசத்தில் தவாங் மலை நகரத்தில் சுற்றுலாப் பயணிகள் விரும்பி விஜயம் செய்யும் அம்சங்களாக மடாலயங்கள், சிகரங்கள் மற்றும் நீர்வீழ்ச்சிகள் போன்றவை அமைந்திருக்கின்றன.

» பசுமையான டால்லி பள்ளத்தாக்கு, ஜிரோ புடு என்ற சிறு குன்று, டரின் மீன் பண்ணை, கார்டோவில் உள்ள உயரமான சிவலிங்கம் ஆகியவைகள் தான் ஜிரோவில் அமைந்திருக்கின்றன.

» வற்றாத ஆறுகளும், பெரிய மரங்களும், கரும்பு தோட்டங்களும் விளைந்த மூங்கில்களுமாய் பசுமை மாறா விளங்கும் அருணாச்சல் பிரதேசம் இயற்கை செதுக்கிய தேசம் என்றால் மிகையாகாது.

## அசாம்

» அசாம் மாநிலத்தின் தலைநகர் திஸ்பூர்.

» அசாம் (Assam), இந்தியாவின் 28 மாநிலங்களுள் ஒன்றாகும்.

» இம்மாநிலம் ஜனவரி 26, 1950ம் ஆண்டு நிறுவப்பட்டது.

» இந்தியாவின் வடகிழக்கில் அசாம் அமைந்துள்ளது. தற்போது அசாமில் 33 மாவட்டங்கள் உள்ளன.

» வடக்கே பூட்டான் மற்றும் அருணாச்சல் பிரதேசமும், கிழக்கில் நாகாலாந்து, மணிப்பூர், மேகாலயா, திரிபுரா மற்றும் மிசோரம் மாநிலங்களும், தெற்கே பங்களாதேஷ் நாடும், மேற்கில் மேற்கு வங்கமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

» அசாமில் ஆட்சி மொழியான அசாமிய மொழியுடன் போடோ மொழி, இந்தி, வங்காளம் மற்றும் வட்டார மொழிகள் பேசப்படுகிறது.

» அசாம் மாநிலத்தின் மொத்த பரப்பளவு 78,438 km2 ஆகும்.

### தனி சிறப்புகள்

» அசாம் மாநிலத்தை ஒட்டியுள்ள 6 மாநிலங்களையும், அசாம் மாநிலத்தையும் ஏழு சகோதரிகள் என்று அழைப்பர். அவை அருணாச்சல் பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மற்றும் மேகாலயா ஆகியவை ஆகும்.

» தேயிலை உற்பத்தியில் சிறந்து விளங்கும் அசாம் மாநிலம், பெட்ரோலியம், பட்டு ஆகியவற்றின் உற்பத்தியிலும் சிறந்து விளங்குகிறது.

» அசாமில் இயற்கை அழகை குத்தகைக்கு எடுத்துள்ளது போல் திகழும் திப்ருகார், ஒரு புறம் அலைகடலென பொங்கிப் பிரவகிக்கும் பிரம்மபுத்ரா நதியையும், அதன் எல்லைப் பகுதியில் பேரமைதியின் தூதுவர் போன்று பரந்து விரிந்திருக்கும் இமயமலையையும் பெற்றுள்ளது.

» அசாமின் மேற்பகுதியில் அமைந்திருக்கும் டின்சுகியா மாவட்டத்தில் பழைய எண்ணெய் கிணற்றிற்காக சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் டிக்பாய் உள்ளது.

» தேயிலை ஏலம் விடும் சந்தைகள் திஸ்பூரின் புகழ் மிக்க இடங்களாகும். தலைநகரமாக இருந்தாலும் அருகிலுள்ள கௌகாத்தியின் நிழலில் வளரும் நகரமாகவே திஸ்பூர் உள்ளது.

» அசாமில் பிரக்ஜொதீஸ்பூர் எனும் பொருள் பொதிந்த வரலாற்றுப் பெயரால் ஒரு காலத்தில் குவஹாத்தி நகரம் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இதன் பொருள் ‘கிழக்கின் வெளிச்சம்’ என்பதாகும்.

» அசாம் மாநிலத்தில் உள்ள மனதை மயக்கும் ஒரே மலைவாசஸ்தலம் ஹஃப்லொங் மட்டுமே. ஆகவே இது ‘கிழக்கு சுவிஸ்சர்லாந்து’ என செல்லமாக அழைக்கப்படுகிறது.

» அசாம் மாநிலத்தின் முக்கியமான ஆன்மீக நகரம் ஹாஜோ. இந்து சமயம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களின் கலவையாக திகழ்கிறது ஹாஜோ நகரம்.

» உலகத்திலேயே மிகவும் பழமையான டோக்லாய் தேயிலை ஆராய்ச்சி மையம் அசாம் ஜோர்கட் நகரில் அமைந்திருக்கிறது.

» அசாமில் சிப்சாகர் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நகரம். கிட்டதட்ட 100